28.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரூ. 1.53 கோடிக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ரூ. 1 கோடியே 53 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை, அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 5,916 மூட்டைகளில் 2,95,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.50.90-க்கும், அதிகபட்சமாக ரூ.54.65-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.38.40-க்கும், அதிகபட்சமாக ரூ.50.85-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 1 கோடியே 53 லட்சத்துக்கு விற்பனை நடைபெற்றதாக சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

### குந்தாவில் அதிகபட்சமாக 54 மி.மீ. மழை பதிவு

நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதில், மாவட்டத்தில் அதிக அளவாக குந்தா பகுதியில் 54 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், சில நாள்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனால், குளிர்ச்சியான காலநிலை நிலவி வருகிறது. இந்நிலையில், கடந்த இரு தினங்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. புதன்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில், மாவட்டத்தில் 322 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இதில், அதிக அளவாக குந்தா பகுதியில் 54 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பதிவான மழை விவரம் வருமாறு (அளவு மில்லி மீட்டரில்): குன்னூர் 51, எமரால்டு 50, அவலாஞ்சி 36, கெத்தை 32, அப்பர்பவானி, கோத்தகிரி தலா 28, பர்லியாறு 22, கேத்தி 6, உதகை 4.2, கிண்ணக்கொரை, கூடலூர் தலா 3, கிளன்மார்கன், நடுவட்டம் தலா 2, கல்லட்டி 1 மி.மீ. மாவட்டத்தில் உதகை, குன்னூர் உள்ளிட்டப் பெரும்பாலான பகுதிகளில் புதன்கிழமை பகலிலும் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பொதுப் பயிர் சாகுபடி விபரம் சேகரிக்க பயிற்சி

ராமநாகபுரம்:ராமநாகபுரம் மாவட்டக்கில் அனைக்கு பயிர் சாகுபடி விபரம் சேகரிப்பகற்கான புக்குாட்ட பயிற்சி கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது. இதையடுத்து மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குனர் அலுவலகத்தில் இகுகுறிக்க செயல்முறை பயிற்சியளிக்கப்பட்டது. அனைக்கு விவசாயக்குறை, கோட்டக்கலைக்குறை அகிகாரிகள் பங்கேற்றனர். புக்குாட்ட பயிற்சிக்கு கிருநெல்வேலி மண்டல புள்ளி இயல் இணை இயக்குனர் சின்னமாரி தலைமை வகித்தார். பொதுப்பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின் நோக்கம், திடல் தேர்வு முறை குறித்து அவர் விளக்கினார். மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குனர் அப்துல் கரீம், வேளாண்மை துணை இயக்குனர்(மத்திய திட்டம்) சுப்பிரமணியன், தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ்வேந்தன், தேசிய மாதிரி ஆய்வு நிறுவன கண்காணிப்பாளர் சேது மகேஸ்வரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) வெள்ளைச்சாமி உள்பட பலர் பங்கேற்றனர். புள்ளி இயல் உதவி இயக்குனர் ரெங்கராஜன் நன்றி கூறினார்.

## தொடரும் சாரல் மழையால் பருத்தி விவசாயிகள் பலன்

ஆர்.எஸ்.மங்கலம்,: ஆர்.எஸ்.மங்கலம், வண்டல், செங்குடி, வரவணி, முத்துார், களத்துார், நெடும்புலிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். இவை தற்போது அறுவடை தருவாயில் உள்ளது. இந்நிலையில் அப்பகுதிகளில் அவ்வப்போது சாரல் மழை பெய்துவருகிறது. இதனால் பருத்தி செடிகள் நன்கு வளர்ந்து பூ, காய்களுடன் பச்சை பசேலென காட்சியளிக்கிறது. முதிர்ந்த செடிகளில் காய்கள் வெடித்து பஞ்சு வெளியேவர துவங்கியுள்ளது. இவற்றை சேகரிக்கும் விவசாயிகள் கிலோ ரூ.43க்கு வியாபாரிகளிடம் விற்பனை செய்கின்றனர். மகசூல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கீரையை நேசியுங்கள் ஆரோக்கியம் வசப்படும்

ஏழைகளின் உணவாக இன்றும் கீரைகள் உள்ளன. அவை உடலுக்கு ஊட்டமளித்து அறிவுத்திறனை மேம்படுத்தும். அனைத்து சத்துக்களும், மருத்துவ குணங்களும் இருப்பதால் அவற்றை 'நடமாடும் சித்தர்கள்' என்றே குறிப்பிடலாம். கடின உணவுகளை கூட எளிதில் செரிக்கும். விலை மலிவு, எளிதாக கிடைக்கிறது என்பதால் சிலர் கீரையை அலட்சியமாக நினைக்கின்றனர். தினமும் ஒருவேளை உணவில் சேர்த்து பாருங்கள் அப்போது தெரியும் கீரையின் அருமை. ஒருவர் ஒரு கட்டு கீரை வரை உண்ணலாம். அசைவம் சாப்பிடும்போதும், இரவிலும் கீரையை தவிர்ப்பது நல்லது. தமிழகத்தில் 100 க்கும் மேற்பட்ட கீரைகள் கிடைக்கின்றன. சிலவற்றை பார்ப்போம் முருங்கை கீரை: இதில் பெரும்பாலான சத்துக்கள் நிறைந்திருப்பதால் கீரைகளின் அரசன் என்றே கூறலாம். 100 கிராமில் நீர்ச்சத்து 76 கிராம், புரதம் 6.7, கொழுப்பு 1.6, தாதுப்பொருட்கள் 2.2, நார்ச்சத்து ஒரு கிராம் உள்ளன. மேலும் மாவுச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமின் 'சி,' பி காம்ப்ளக்ஸ் போன்றவை காணப்படுகின்றன. இது 92 கலோரி திறன் உடையது. இந்த கீரையை அடிக்கடி உண்பவருக்கு எந்தநோயும் எளிதில் அண்டாது என்பர். உடல் பலவீனம், கருப்பை கோளாறுகள், எலும்பு, நரம்பு தொடர்பான நோய்களை குணமாக்கும். உஷ்ணத்தை குறைக்கும். முளைக்கீரை: அனைத்து வயதினருக்கும் ஏற்றது. 100 கிராமில் நீர்ச்சத்து 74 கிராம், புரதம் 1.4 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, இரும்பு, வைட்டமின்கள் 'ஏ,' 'பி,'

'பி2,' 'சி' காணப்படுகின்றன. 42 கலோரி திறன் உடையது. காய்ச்சல், காசநோய், பசியின்மை போன்றவற்றை நீக்கும்.

சிறுகீரை: இதனை தொடர்ந்து சாப்பிட்டால் நினைவாற்றல் அதிகரிக்கும். நூறு கிராமில் நீர்ச்சத்து 90 கிராம், புரதம் 2.8, கொழுப்பு 0.3, தாதுப்பொருட்கள் 2.1, சர்க்கரைச்சத்து 4.8 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு காணப்படுகின்றன. 30 கலோரி திறன் உடையது.
உடலில் கழிவுகளை வெளியேற்றும். வண்டுக்கடி, பூச்சிக்கடி விஷங்களை குறைக்க கூடியது. காசநோய், சிறுநீர்க்கடுப்பு, கண் நோய்கள் குணமாகும்.
மணத்தக்காளி கீரை: குடல் புண்ணை ஆற்றுவதில் முன்னணியில் உள்ளது. 100 கிராமில் நீர்ச்சத்து 82.1 கிராம், புரதம் 5.9, கொழுப்பு ஒன்று, தாது உப்புகள் 2.1, சர்க்கரைச்சத்து 8.9 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமின் 'சி' நிறைந்துள்ளன. 68 கலோரி திறன் உடையது. இது வாய், வயிற்று புண்ணை சரிசெய்யும். உடல் சூட்டை தணிக்கும்.
பொன்னாங்கண்ணி கீரை: பொன்னங்கண்ணிகீரையை தொடர்ந்து சாப்பிட்டால் கண் டாக்டரை தேடி போகத் தேவையில்லை என்பர். 100 கிராம் கீரையில் நீர்ச்சத்து 77.4 கிராம், புரதம் 5, கொழுப்பு 0.7, தாது உப்புகள் 2.5, நார்ச்சத்து 2.8, சர்க்கரைச்சத்து 11.6 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு, மாவுப்பொருட்கள், வைட்டமின் 'சி' காணப்படுகின்றன. 73 கலோரி திறன் உடையது. மேனிக்கு மினுமினுப்பை தரும்.
பருப்புக் கீரை: இதனை அதிகளவில் சேர்த்து கொண்டால் பெண்களுக்கு தாய்ப்பால் சுரக்கும். 100 கிராமில் நீர்ச்சத்து 90.5 கிராம், புரதம் 2.4, கொழுப்பு 0.6, தாது உப்புகள் 2.3, நார்ச்சத்து 1.3, சர்க்கரைச்சத்து 2.9 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு, மாவுப்பொருட்கள், வைட்டமின் 'சி' காணப்படுகின்றன. 27 கலோரித் திறன் உடையது. இந்த கீரை ரத்தத்தை சுத்தமாக்கும். நீர் கடுப்பு, எரிச்சலை போக்கும். பெண்களுக்கு வெள்ளைப்படுதல் குணமாகும்.
புளிச்சக்கீரை: கோடையில் சூட்டை தணித்து உடல் ஆரோக்கியத்தை வலுப்படுத்தும். 100 கிராமில் நீரச்சத்து 86.4 கிராம், புரதம் 1.7, கொழுப்பு 1.1, தாதுஉப்புகள் 0.9, நார்ச்சத்து 9.9, சர்க்கரைச்சத்து 9.9 கிராம் உள்ளன.

சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு, மாவுப்பொருட்கள், வைட்டமின் 'சி' மிகுந்துள்ளன.56 கலோரி திறன் உடையது. நரம்புத் தளர்ச்சியை போக்க கூடியது. ரத்த அழுத்தம், இதய நோய், ஜீரணக்கோளாறு, மலச்சிக்கலை குணப்படும்.

அகத்தி கீரை: உடலில் அதிகப்படியான பித்தத்தை குறைக்கும். 100 கிராமில் நீரச்சத்து 74.5 கிராம், புரதம் 7.5,கொழுப்பு 1.3, தாதுப்பொருட்கள் 3.4, நார்ச்சத்து 1.9 கிராம் உள்ளன. மாவுச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமி 'சி,' பி காம்ப்ளக்ஸ் காணப்படும். 90 கலோரி திறன் உடையது. ஜீரண சக்தியை அதிகரிக்கும். அதிகம் சாப்பிட்டால் வாயு பிரச்னை ஏற்படும். இதனால் தினமும் சாப்பிட கூடாது. அஜீரண கோளாறு உள்ளோர் குறைவாக சாப்பிட வேண்டும். மருந்து எடுக்கும் சமயங்களில் சாப்பிட கூடாது.

தண்டுக்கீரை: இளைமையில் முதுமை நிலையை தடுக்கும். 100 கிராமில் நீர்ச்சத்து 85.6 கிராம், புரதம் 4, கொழுப்பு 0.5, தாதுப்பொருட்கள் 2.7, நார்ச்சத்து 1.1 கிராம் உள்ளன. மாவுச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமின் 'சி,' பி காம்ப்ளக்ஸ் காணப்படும். 45 கலோரி திறனுடையது. இந்த கீரை நீர்க்கடுப்பு, வெட்டைச் சூட்டை தணிக்கும். உடலுக்கு வலிமை, பொலிவை ஏற்பத்த கூடியது. மலச்சிக்கலுக்கு நல்லது. அதிகம் சாப்பிட்டால் வாயு தொல்லை ஏற்படும்.

வெந்தயக்கீரை: தோல் நோய்களை குணப்படுத்த கூடியது. 100 கிராமில் நீர்ச்சத்து 86 கிராம், புரதம் 4.5, கொழுப்பு 0.9, தாதுப்பொருள் 1.5, நார்ச்சத்து 1.1 கிராம் உள்ளன. மாவுச்சத்து, கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு, வைட்டமின் 'சி,' பி காம்ப்ளக்ஸ் காணப்படுகின்றன. 49 கலோரி திறனுடையது. வயிற்றுப் பொருமல், வாயு கோளாறுகள், தொடர் இருமல், ருசியின்மையை தீர்க்கும்.

கரிசலாங்கண்ணி கீரை: வெள்ளை, மஞ்சள் என, 2 வகையான கரிசலாங்கண்ணி உள்ளன. 100 கிராமில் நீர்ச்சத்து 81.1 கிராம், புரதம் 4.4, கொழுப்பு 0.8, தாது உப்புகள் 4.5, சர்க்கரைச்சத்து 9.2 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு காணப்படுகின்றன. 62 கலோரி திறன் உடையது.

மஞ்சள் கீரையில் நீர்ச்சத்து 93.7 கிராம், புரதம் 1.1, கொழுப்பு 0.2, தாது உப்புகள் 1.4, நார்ச்சத்து 0.4 கிராம், சர்க்கரைச்சத்து 3.2 கிராம் உள்ளன. சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்பு காணப்படுகின்றன. 19 கலோரி திறன் உடையது. தொண்டை நோய்கள், மஞ்சள்காமாலை, குஷ்டம், ரத்த சோகை போன்ற

பிரச்னைகளை தீர்க்கும். கல்லீரலை பலப் படுத்தும். அரைக்கீரை: தாய்மார்களுக்கு அரைக்கீரை ஒரு டானிக். காய்ச்சல், குளிர் காய்ச்சல், கபநோய்கள், வாயு கோளாறுகள் நீக்கும்.

## மானாவாரி நிலங்களில் பணிகளை துவக்கிய விவசாயிகள்: மழை மீது நம்பிக்கை

கல்லல், :கடந்த இரண்டு நாட்களாக கல்லல்,சாக்கோட்டை பகுதிகளில் பெய்த மழையால்,விவசாய பணிகள் விறு விறுப்படைந்துள்ளது.முன் மழை பெய்த போதும், பின்மழை பொய்க்க கூடாது என விவசாயிகள் வேண்டுதல் விடுத்து வருகின்றனர்.

கடந்த ஒரு மாதமாக வெயில் சுட்டெரித்த நிலையில், இந்த மாதம் ஒன்றிரண்டு நாட்கள் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் காரைக்குடி,கல்லல், சாக்கோட்டை பகுதிகளில் மழை பெய்துள்ளதால்,விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மாத தொடக்கத்திலிருந்து தற்போது வரை, விவசாயிகள் தங்கள் நிலத்தை இரண்டு முறை உழுது பண்படுத்தி வைத்துள்ளனர்.நேற்று முன்தினம் பெய்த மழையால் விதைக்க தயாராகி வருகின்றனர். வரத்து கால்வாய்களில் தண்ணீர் செல்லாததால், விவசாய நிலங்களில் தேங்கியுள்ள தண்ணீரை கடத்தி விடும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

முருகப்பன்,79, கீரணிப்பட்டி: ஏற்கனவே பெய்த கோடை மழையில் இரண்டு முறை உழுது உள்ளோம். நேற்று முன்தினம் பெய்த மழையால், நிலங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. ஆடிப்பட்டத்தில் விதைக்கும் போது தண்ணீர் தேங்கி நின்றால், விதை முளைக்காது, என்பதால் அவற்றை வரப்பு வழியே கடத்தி விடுவதற்காக,கால்வாய்களின் வாட்டத்தை சரி செய்து வருகிறோம். முன்பு முப்போகம் விவசாயம் செய்தோம். தற்போது ஒரு போகத்திற்கே வழியில்லை. கடந்த ஆண்டு முன்மழை நன்றாக பெய்த போதும், பின்மழை ஏமாற்றி விட்டது. ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை செலவழித்தும் நஷ்டம் ஏற்பட்டது. கடைசி நேரத்தில் மழை இல்லாததால் நெற்கதிர் பதராகி போனது. மாடுகள் தான் அவற்றை மேய்ந்தது. இந்த முறை முன் மழை பெய்தபோதும், பின்மழை ஏமாற்ற

கூடாது.

வேலைக்கு ஆட்கள் கிடைப்பது இல்லை. 5 ஏக்கரில் 2 ஏக்கர் மட்டுமே விவசாயம் நடக்கிறது. ஆடி 18-க்கு முன்பு ஒரு மழை பெய்தால் மீண்டும் ஒரு முறை உழவு போட்டு,விதைப்பு பணியை தொடங்குவோம். இல்லை என்றால் ஆவணியில் தான் விதைப்போம், என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஆடிப்பெருக்கையொட்டி மேட்டூர் அணை திறப்பு: காவிரி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது



ஈரோடு

ஆடிப்பெருக்கு விழா வருகிற ஆகஸ்டு மாதம் 2–ந் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மேட்டூர் அணையில் இருந்து காவிரி ஆற்றுக்கு கூடுதலாக தண்ணீர் திறக்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் காவிரி ஆறு வழியாக ஈரோடு மாவட்டத்தை வந்தடைந்தது. இதனால் கடந்த சில நாட்களுக்கு முன்பு ஈரோடு கருங்கல்பாளையம் காவிரி ஆற்றில் ஓடைபோல் சென்ற தண்ணீர், வரத்து அதிகரித்து உள்ளதால் பரந்து விரிந்து செல்கிறது. தண்ணீர் அதிகமாக செல்வதால் பொதுமக்கள் பலர் காவிரி ஆற்றில் குளித்து மகிழ்கிறார்கள்.

## கொடைக்கானலில் பலத்த மழை: வெள்ளிநீர் வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது



கொடைக்கானல்

கொடைக்கானலில் பலத்த மழை காரணமாக வெள்ளிநீர் வீழ்ச்சியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

<u>பலத்த மழை</u>

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் பகுதியில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று சுமார் 12 மணி அளவில் வானில் மேகக்கூட்டங்கள் திரண்டன. பின்னர் சிறிது நேரத்தில் சாரல் மழை பெய்தது. அதனைத்தொடர்ந்து மாலை 4 மணி முதல் 5 மணி வரை பலத்த மழை பெய்தது.

இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடி வந்தன. இதில் போட் கிளப்பில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை 30 மில்லி மீட்டர் மழை பதிவானது.

<u>ஆர்ப்பரித்து கொட்டியது</u>

பலத்த மழை காரணமாக கொடைக்கானலில் உள்ள வெள்ளிநீர்வீழ்ச்சி, பாம்பார்நீர்வீழ்ச்சி, பியர்சோழா அருவி, தேவதை அருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. மேலும் நகரில் உள்ள நட்சத்திர ஏரிக்கும், நகருக்கு குடிநீர் வழங்கும் அருவிகளுக்கும் நீர்வரத்து அதிகரித்தன. இந்த மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விவசாயிகள், மாற்றுப்பயிர் சாகுபடி செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம்



குத்தாலம்,

விவசாயிகள், மாற்றுப்பயிர் சாகுபடி செய்வதன் மூலம் அதிக லாபம் பெறலாம் என்று கோவை வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் பேசினார்.

## கலந்தாய்வு கூட்டம்

மயிலாடுதுறை அருகே மங்கைநல்லூரில் உழவர் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ரவி தலைமை தாங்கினார். கலிபோர்னியா பல்கலைக்கழக ஓய்வு பெற்ற வேளாண்மை விஞ்ஞானி அருள்சேகர், வீரசோழன் உழவன் உற்பத்தியாளர் சங்க தலைவர் சந்தானகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முனைவர்கள் கவிதாஸ்ரீ, விஸ்வநாதன், இளங்கோ ஆகியோர் தொழில்நுட்ப உரையாற்றினர். நபார்டு வங்கி மாவட்ட உதவி பொது மேலாளர் கணேஷ், மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இதில் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர் ராமசாமி கலந்து கொண்டு பேசியதாவது:–

## மாற்றுப்பயிர் சாகுபடி

உலக பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு வருமானம் விவசாயத்தில் இருந்து கிடைக்கிறது. விவசாயிகள் விவசாயத்தை மட்டுமே நம்பி இருக்காமல் துணை தொழிலையும் செய்ய வேண்டும். தென்னை, பனை மற்றும் பழமரங்கள், கால்நடைகளை வளர்க்க வேண்டும். நெல்லை தவிர்த்து உளுந்து, பயிறு, பருத்தி, கடலை, காய்கறிகள் போன்ற மாற்றுப்பயிர் சாகுபடி செய்வது மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட விவசாய பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## கண்காட்சி

தொடர்ந்து விவசாயிகளுக்கு லாபம் தரக்கூடிய மாற்றுப்பயிர்கள் பயிரிடுவது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. கூட்டத்தில் மாற்றுப்பயிர் மாதிரி கண்காட்சி மற்றும் பாரம்பரிய நெல் ரகங்களான யானைக்கவுனி, மாப்பிள்ளை சம்பா, குள்ளகார், கிச்சடிசம்பா, சீரகசம்பா உள்ளிட்ட நெல்ரகங்கள் குறித்த கண்காட்சி விவசாயிகள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தது. இதில் வேளாண்மைத்துறை அதிகாரிகள் மற்றும் குத்தாலம், நாகை, மயிலாடுதுறை, சீர்காழி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 200–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் விவசாயி ஜானகிராமன் நன்றி தெரிவித்தார்.